அவையினுடைய கண்ணியத்தை என்றுமே நாம் காப்பாற்ற முடியாது. அப்படிப்பட்ட நேர் மாறான ஒரு விஷயத்தைப் பிரச்சாரத்தில் விட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதற்குத் தகுந்த நடவடிக்கை இந்த அவையின் மூலம் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்பிற்குரிய திரு. ரமணி அவர்கள் கூறிய கருத்தின்படி நான் ஏற்கனவே இங்கே தீர்ப்பு அளிக்கிறபோதே, தீர்ப்பில் கூட நான் பெருந்தன்மை காட்டி இந்தக் கூட்டத் தொடர் வரைக்கும் வரக்கூடாது என்று அறிவித்திருக்கிறேன். முறைப்படி பார்த்தால் இன்னும் கடுமையான தீர்ப்புகளைக் கூடக் கொடுத்து இருக்கலாம். இந்த அவையில் நடந்த நிகழ்ச்சிகளை இங்கே இருக்கிற அத்தனை உறுப்பினர்களும் நேரடியாகப் பார்த்திருக்கிறார்கள். இங்கு பக்கத்திலே இருக்கின்ற செய்தித்தாள் நிருபர்கள் அத்தனை பேருமே பார்த்திருக்கிறார்கள். இதற்குப் பின்னாலும் எதிர்ப் பிரச்சாரம் என்ற முறையில் தவறான பேட்டிகள் தரப்படுமானால், அந்தப் பேட்டிகள் செய்தித்தாள்களில், வருமானால் அவை உரிமை மீறல் பிரச்சினையில் வந்து கடுமையான நடவடிக்கைக்கு ஆளாக வேண்டியிருக்கும் என்பதை மட்டும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

அ பொதுக் கணக்குக் குழு

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கையை அளிக்கிறேன்:

"1990-91ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தொன்பதாவது மற்றும் ஐம்பதாவது அறிக்கைகள்".

12.10 மணி.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஆ. பொது நிறுவனங்கள் குழு

திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன்:

"1990-91ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்திரெண்டாவது, ஐம்பத்தி மூன்றாவது மற்றும் ஐம்பத்தி நான்காவது அறிக்கைகள்"